RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s47

# இராஜுக்கள் சமுதாயத்தின் சடங்குமுறைகள்

**சு. சத்யா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி, இராஜபாளையம்-626117, தமிழ்நாடு, இந்தியா.

# Customs of Rajus' Community

**S. Sathya** [a, *]

[a] Department of Tamil, Rajapalayam Rajus' College, Rajapalaiyam-626117, Tamil Nadu, India

* Corresponding Author: Sathyaganesan3006@gmail.com

Received: 28-04-2021
Revised: 03-05-2022
Accepted: 05-05-2022
Published: 07-07-2022

Check for updates

**ABSTRACT**

The Rajus' community migrated from Andhra Pradesh to South Tamilnadu and settled there permanently in the black soiled region before 600 years ago due to regimental changes. They engaged themselves in Agro-based occupation after their displacement. As they concentrated more on the clothing business, harvesting cotton had become their field of interest, and thus they adapted their lifestyle on the land of black soil.variety of rituals are followed by various communities globally. Accordingly, the communit people of the Rajus' follows several rituals from their birth to death. As part of their ritual, all the things invariably used on the occasions of ceremonies and their fixed lifestyle represent some hidden scientific facts. Those are researched and interpreted to prove the significance of rituals in human life which is strongly connected with nature. This research paper lays emphasis on the main aim of the customs and rituals of the humans. They are connected with the formidable factors strengthening the physical energy. Paying attention to the ancient rituals and customs are sadly on the decrease in the contemporary period. The evidence of diminished rituals can be seen in temples and their way of celebrating festivals. The purpose of the research is to manifest the necessity of restoring the significance of rituals framed scientifically by our ancestors. This research will positively help to discern the hidden scientific facts in the rituals for close and prompt follow up of the same.

**Keywords:** Rajus' Community, Rituals, Occupation

## முன்னுரை

மனிதர்களின் வாழ்க்கை முறைகளுக்கும் சடங்குமுறைகளுக்கும் நெருங்கியத் தொடர்புண்டு. ஒரு சமூகத்தின் தனித்துவம் அதன் சடங்குமுறைமைகளைக் கொண்டு அமையும். ஆனால் இந்தச் சடங்குகளுக்கும், அச்சமூகத்தின் வாழ்க்கைமுறைகளுக்கும் இடையே இருக்கும் உள்ளார்ந்த நெறிமுறைகளை, அறிவியல் விதிகளுக்குட்பட்டு மக்களுக்குப் பயன்படும் பல வகைமைகளின் கீழ்க்கொண்டு ஆய்வுசெய்ய முடியும். இந்தச் சடங்குமுறைகளையும், ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், பழக்கத்தில் இல்லாமல் போன வழிமுறைகளையும், சுட்டிக்காட்டி அதனால் ஏற்பட்ட எதிர்விளைவுகள், சடங்குகளின் பயன்கள் மற்றும் பயனற்றத்தன்மைகள் குறித்தும் ஆய்வு செய்வதைக் கருதுகோளாகக் கொண்டு இராஜுக்கள் சமுதாயத்தின் சடங்குமுறைகள் என்ற தலைப்பில் ஆய்வுச்செய்யப்படுகிறது.

## சடங்குமுறைகளின் நோக்கம்

மனிதனாக்கப்பட்டவன் பிறப்பு முதல் இறப்பு வரை பல பல தொடர்புகளோடு இணைக்கப்பட்டவன் ஆவான். மனிதனுடையத் தொடர்புகளால் இயற்கையும், இயற்கையின்

தொடர்புகளால் மனிதனும் என உலகத்தின் இயக்கங்கள் இயங்குகின்றன. மனிதனின் உயிரோட்டமான வாழ்க்கைக்கு இன்றியமையான ஆற்றல் எதுவோ அதை மீண்டும் மீண்டும் புத்துருவாக்கம் செய்துகொள்வதன் பொருட்டே சடங்குமுறைகள் உருவாகியிருக்கும். "மனிதன் தோன்றிய அன்றே சடங்கும் தோன்றியிருக்கும். ஏனெனில் சடங்கானது மனிதனின் நம்பிக்கை அடிப்படையிலே உருவானதுதான். அறிவியல் கண்டுபிடிப்புகள் தோன்றாதக் காலத்திலேயே மனிதன் இயற்கையைச் சார்ந்து வாழ்தலும், வளர்தலும் குறித்து மேம்படுத்திக் கொண்ட அணுகுமுறைகளின் வெளிப்பாடேச் சடங்குகள் ஆகும். மனிதக்குலவகையினங்கள் மற்றும் நிலவியல் சார்ந்த பண்பாடுகள் உலகின் பல்வேறுபகுதிகளில் இயங்குகின்றன (Jyotirani, 2004). அவை ஒவ்வொன்றும் தத்தமதுமொழி இனம் சமூகம் சார்ந்தத் தனிச் சிறப்புநிலை உடையவையாகவும், வாழ்வியலில் அனைத்துத் துறைகளையும் மற்றும் பிற சமூகங்களையும் அரவணைத்தப் பழக்கவழக்கங்களைக் கொண்ட மரபுகளை உள்ளடக்கியவையாகவும் அமைந்து வெளிப்படுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள ஒவ்வொரு நிலைமாற்றத்திற்கும் சடங்கு முக்கியப்பங்கு வகிக்கின்றது. "உயிரியல் தளத்தில்; நிகழும் நிலைமாற்றங்கள் இணைநிலையாகக் சமூகப் பண்பாட்டுத் தளத்தில் வாழ்வின் நிலைமாற்றங்கள் மேலும் நுண்மையாக்கம் பெற்றுப் பல்கிப்பெருகிவிடுகின்றன" இச்சடங்குவயப்படும் நிலைமாற்றங்கள் வாழ்க்கைவட்டச் சடங்குகளாகும் (Bhakthavatsala Bharathi, 2002). காதுக்குத்துதல், பருவமடைதல், திருமணம், வளைக்காப்பு (சூல்), குழந்தைப் பிறப்பு, இறப்பு, கருமாதி நினைவுநாள் கடைப்பிடித்தல் (திதி) என அமைகின்றன. இவ்வகைச் சடங்குகளில் அல்லாது சமூக, பொருளாதார, சமயஅரசியல், அர்ப்பணிப்பு, கலை, அழகியல் தளங்களைச் சார்ந்தும் இராஜுக்கள் சமூகத்தில் சடங்குகள் நடத்தப்படுகின்றன.

## சடங்குகளின் வகைமைகள்

சடங்குகளின் தன்மைகள் பன்முகப்பட்டவை. அவை நிகழ்த்தப்படும் காலம், இடம், சூழல், தேவை, நோக்கம் போன்ற காரணிகளை முன்வைத்து அவற்றின் தன்மைகள் வேறுபடுகின்றன (Bhakthavatsala Bharathi, 2002). இராஜுக்கள் சமூகச் சடங்குமுறைகள் என்னும் ஆய்வுக்கட்டுரைத் தலைப்பில், தாய்மையடையும் சடங்கிலிருந்து ஆய்வு செய்யப்படுகிறது..

## தாய்மைச் சடங்குமுறைகள்

தாய்மை என்பது ஒரு பெண்ணின் வாழ்நாளில் ஒரு முக்கியநிகழ்வு. ஒருபெண் கர்ப்பமாகிவிட்டால் அந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் கரைபுரண்டோடும். பெண்களுக்கு இந்தக்காலகட்டத்தில் தான் அதிகமான கவனம் தேவை. இராஜுக்கள் சமூகத்தில் ஒருபெண் கர்ப்பவதியாகிவிட்டால் உற்றார் உறவினர் மட்டும் அல்லாது அண்டைவீட்டார் என்று அனைத்துத்தரப்பிலும் அந்தப் பெண்ணுக்கு விருப்பமானப் பலகாரங்கள் பலவகையான உணவு வகைகள், பழங்கள் எனக் கொண்டுவந்து தருவது வழக்கமாகும். மற்றச்சமூகத்தைப் போல் கர்ப்பமான ஏழாம் மாதத்தில் தாயின் நலனுக்கும் குழந்தையின் ஆரோக்கியத்திற்காகவும் செய்யப்படும் சீமந்தம் எனப்படும் வளைகாப்பு என்பது இராஜூக்கள் சமூகத்தில் உறவுகளை அழைத்து, சூலுற்றப் பெண்ணிற்காக பலவகையான உணவுகளை தாய் வீட்டிலிருந்து கொண்டு வந்து அனைவருக்கும் வழங்குவர். ஆனால் பிற சமூகத்தில் இருப்பது போல வளையல், வெள்ளிக்காப்பு அணிவிக்கும் வழக்கம் முன்னர் இல்லை, தற்காலத்தில் பிற இனத்தாரோடு இணைந்து வாழ்வதால் கண்ணாடி வளையல் அணிவிக்கும் பழக்கம் பின்பற்றப்படுகிறது. நல்லநாள் பார்த்துப் பெண்ணைப் பிறந்தவீட்டார் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். மருத்துவரீதியாக உணவு, சீரகக்கசாயம், சிறுகீரைகசாயம், குங்குமப்பூ போன்றவற்றை அப்பெண்ணிற்கு வழங்குவார்கள். 9-ம் மாதத்தில் சூடானச்சோற்றில் வெள்ளைப்பூண்டு ரசம் கலந்து, காலையில் வெறும் வயிற்றில் கொடுப்பார்கள். தண்ணீர் ஒருமணிநேரம் கழித்து அருந்தக் கூறுவார்கள். இந்தத் தருணத்தில் 9ம் மாதம் பிறந்தவுடன் நல்லநாள் பார்த்து முதலில் மஞ்சள்தூள் எடுத்துவைத்து, பின்னர் பிரசவத்திற்கு மருத்துவமனைக்குச் செல்லும்போதுக் கொண்டு செல்ல ஆயத்தமாக, தாய்க்கும் சேய்க்கும் தேவைப்படும் அனைத்துப்

பொருட்களையும் எடுத்துவைப்பார்கள். பிரசவக்காலத்தில் கொடுக்கக்கூடியப் பேறுகால உருண்டை, சுக்குஉருண்டையும், அந்த நல்லநாளில் தயார் செய்துவைப்பர். நல்லநாளில் இந்தவழக்கமுறையைச் செய்தால் பிரசவம் சுகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. உடல்வலியைக் குறைப்பதற்கான அதேவேளையில் மனோதிடத்தை ஏற்படுத்துவதற்கானச் சடங்குமுறையாகவே அமைகின்றன. இச்சமூகத்தில் பெரியோர்கள் அறிவுறுத்துவது கர்ப்பம்தரித்தப் பெண்கள் இறைவனின் பாடல்களைக் கேட்டுக் கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தால் அழகும் அறிவும் வாய்க்கப்பெற்றக் குழந்தைப்பெறுவர் என்று வலியுறுத்துவர் (Rajammal, N., 2021, Informer, Rajapalayam, Virudhunagar, India.).

## பிறப்புச்சடங்கு: (குழந்தைக்கானச் சடங்கு, தாய்க்கானச் சடங்கு)

குழந்தைபிறந்தவுடன் ஒருவெள்ளிக்கிண்ணத்தில் கருப்பட்டித் துண்டும், ஒரு நறுக்கிய வெள்ளைப்பூண்டும் சேர்த்து, தேன் ஊற்றித் தங்கமோதிரத்தில் நனைத்துக் குழந்தையின் நாக்கில் தடவுவார்கள். குழந்தைக்குப் புதிய மஞ்சள்நிறச் சட்டையைப் போடுவார்கள். தாய்க்கு கஸ்தூரிமஞ்சளை, 3 வெற்றிலையில் வைத்து மடித்துவிழுங்கக் கொடுத்து, பின்னர் சிறிதுநேரம் கழித்துப் பெருங்காயஉருண்டை மற்றும் சுக்கு உருண்டை பெரியோர்கள் வழங்குவார்கள்.. குழந்தைப்பிறந்து தன் தந்தைவீட்டை அடையும் வரை குழந்தையும், தாயும் அந்தவீடும், உற்றார், உறவினர்களும் தீட்டடைந்ததாக எண்ணிக் கொள்கிறார்கள். கர்ப்பக் காலத்தினைவிட இதனை மிகமுக்கியமாகவும் கட்டாயமாகவும் கொள்கின்றனர். குழந்தைப்பேறு நிகழ்ந்தவீட்டில் கடவுளுக்குச் செய்யும் பூசைகள் தவிர்க்கப்படுகின்றன. தாய்க்கும் குழந்தைக்கும் தனியிடம்,உடை,உணவுத்தட்டுகள் தரப்படுகின்றன. அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட இடத்தை அதாவது அறையினை “முட்டுவீடு” என்று கூறுகின்றனர். இந்தநாட்களில் (உறவினர்கள் மட்டும்) யாரும் குழந்தையைக் காணவருவார்களென்றால் நன்கு கை, கால் கழுவி தண்ணீர் தெளித்துக்கொண்டு உள்ளேவர அனுமதிப்பர். இவ்வீட்டை சேர்ந்தவர்கள் பக்கத்து வீடுகளுக்குக் கூடச் செல்லக்கூடாது, பிறகுழந்தைகளைத் தொடக்கூடாது என்று இந்தத் தீட்டுச் சடங்குகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

## பெயரிடுதல் (புருண்டு):

குழந்தைப் பிறந்த 13ம் நாள் தாயையும், குழந்தையும் நீராடச்செய்வர். பின்னர் குடும்பப் புரோகிதரை வரவழைத்துப் பெயரிடுதல் என்ற சடங்கு நிகழ்த்தப்படும். புரோகிதர் மஞ்சளால் பிள்ளையார் செய்து, மங்கலப் பொருட்கள் வைத்து, வேதமந்திரங்களைச் சொல்லி கும்பத்திலுள்ள நீரை மாவிலையால் இல்லம் முழுவதும் தெளித்துத்தூய்மைப்படுத்துவர். இந்ததூய்மைப்படுத்துதல் நிகழ்ச்சி தந்தை வீட்டில் முடிந்தபிறகே, தாய் வீட்டுக்குச்செல்வர். தாய் வீட்டில் புரோகிதர் முன்னிலையில் குழந்தையோடு தந்தையும், தாயும் மனையில் அமர்ந்து தந்தைவீட்டில் தேர்ந்தெடுத்தக் குழந்தையின் பெயரை, குழந்தையின் தந்தை குழந்தையின் காதில் கூறி மூன்று முறை அழைப்பார். குழந்தையைப் பட்டுத்தொட்டிலில் போட்டு சிறிது ஆட்டியப்பிறகு அனைவருக்கும் இனிப்புப் பகர்ந்தளிப்பார்கள். குழந்தைக்கு அன்றுதான் முதன் முதலில் தொட்டிலில் இடுதல், மஞ்சள் கயிறு கைகளில் கட்டுதல், மிகமுக்கியமாகக் கறுப்புபொட்டிடுதல், கையில் வசப்பு கட்டுதல் எனச் சடங்குகள் செய்வர். முதல் கறுப்புப் பொட்டானது அரிவாளின் நுனியில் விளக்கெண்ணைய் தடவித் தீயில் வாட்டும் போது உண்டாகும் கறுப்புநிற மையைத் தாய்க்கும் குழந்தைக்கும் இடுவர். குழந்தைக்கு வைக்கும் கறுப்புப் பொட்டடை இராஜூக்கள் சமூகமக்களேத் தயார்செய்கிறார்கள். அன்று இரவில் தேங்காய்ச் சிரட்டையில் தாய்ப்பால் இட்டு, வசம்பு, சுக்கு, பெருங்காயம் இந்த மூன்றையும் விளக்குத் திரியில் வாட்டிப் பாலில் உரசிக் குழந்தைக்கு ஒரு சங்கு அளவுக்கொடுக்க வேண்டும். இச்சமூகமக்களின் குழந்தைப் பராமரிப்புத் தனித்துவம் பெற்றது. பெயரிடுதல் நிகழ்ச்சிக்கு பின்னர் ஒவ்வொருநாளும் ஒருகீரை என 48 நாட்கள் அதிகாலையில் வெந்நீரில் போட்டு, நன்கு வடிகட்டி ஒருசங்குஅளவு குழந்தைக்கு வழங்குவர். பின்னர் நல்லெண்ணையால் கண் கட்டுதல், மூலிகைப்புகை, கை மருந்து எனச் சிறப்பான முறையில் தாய் வீட்டிலிருந்து, தந்தைவீட்டிற்குக் குழந்தையைக் கொண்டு செல்லும் வரை முக்கியச்சடங்காகப் பின்பற்றப்படுகின்றது. மிகமுக்கியமாக குழந்தைக்குப் பிள்ளைவளர்த்தியிலை, கஸ்தூரிமஞ்சள்,

குளுக்கப்பட்டைச் சேர்த்து அரைத்துக் குளிப்பாட்டுதல் மற்றும் ஏதாவதுதுக்கம் அல்லது தோரணம் கட்டக்கூடிய நிகழ்ச்சி வரும்பொழுதுக் குழந்தைக்கும் அம்மாவிற்கும் சிறிய உருண்டையாகக் கட்டிக் கொள்வர் இது முக்கியச்சடங்காகும் (Rajammal, N., 2021, Informer, Rajapalayam, Virudhunagar, India).

## சடங்கின் பொருண்மை

கும்பநீரின் முன் புரோகிதர் உச்சரிக்கும் மந்திரம் (வாழ்த்து மற்றும் காப்பு உச்சாடனங்கள்) நீரில் ஒருசக்தியைப் பரப்பி அதைத் தெளிக்கும்போது வீடுதூய்மையடைகிறது. மஞ்சள் பிள்ளையார், சந்தனம், குங்குமம் என்று இச்சடங்குப் பொருட்கள் கிருமிகளின் பாதிப்பைத் தடுக்கின்றது. மாவிலை அதிகமான கார்பன்-டைஆக்ஸைடை உள்வாங்கி ஆக்ஸிஜனை வெளியிடும் பொருட்டுப் பயன்படுத்தப்படுகிறது. கறுப்புப்பொட்டு, கரும்பாசிக்காப்பு முதலியன அக்குழந்தையின் மீதான கண்திருஷ்டியை நீக்கும், குழந்தைக்கும் தாய்க்கும் சீரான ஆரோக்கியத்தைக் கொடுக்கும். மேலும் பெயரிடுதல் நிகழ்வில் அணிவிக்கப்படும் மஞ்சள் கயிறு, வசம்புக்காப்பு இதிலிருந்து வெளிவரும் மணம் குழந்தைக்குச் சீர்படாமல் பாதுகாக்கும். இவ்வாறு பிள்ளைவளர்த்தி இலையிலும், மஞ்சளிலும் இருந்து வெளிவரும் மணம் குழந்தையின் நாசியில் கிருமி அண்டாது பாதுகாக்கும். “சடங்கின் பல்வேறு தன்மைகளை இனங்கண்டு வரையறை செய்த அறிஞர்கள் இறுதியாகச் சடங்குகள் புனிதத்தோடு தொடர்புடையது என்பதை வலியுறுத்தினர் (Bhakthavatsala Bharathi, 2002).

## முடிஎடுத்தல் (சௌளனம்)

இந்துசமய மக்களின் நம்பிக்கைகளில் ஒன்று முடியெடுத்தல். .குழந்தைப்பிறந்தபோது இருந்த தலைமுடி நீக்கப்பட்டு இறைவனுக்குச் செலுத்தப்படுகிறது. இச்சடங்கு தன்னுள் இருக்கும் எண்ணற்ற ஆசைகளை இறைவனிடம் சரணடையச் செய்வதாக நம்பப்படுகிறது. இந்நிகழ்ச்சி ஒரு நல்லநாள் பார்த்து குலதெய்வக் கோவிலில் வைத்து, குழந்தையின் தாய்மாமன் மடியில் குழந்தையை உட்கார வைத்து நடைபெறும். இதற்கு சடங்குப்பொருட்களாக, நாவிதனுக்கு அரிசி1படி, தேங்காய் 1, பணம், வெற்றிலைபாக்கு, பழம், போன்றவை காணிக்கையாக வைக்கவேண்டும். கோயில் அர்ச்சகர்க்கு பச்சரிசி 1 படி, தேங்காய் 1,வெல்லம் 1,உருண்டை தட்சணை என அனைத்தும் தளிகைக்காகக் கொடுப்பர். அதுபோன்று உறவினர் மற்றும் நண்பர்களுக்கும் பச்சரிசிமாவுஉருண்டை, பொட்டுக்கடலைக் கொடுத்து நிகழ்ச்சிக்கு வருக என அழைப்பர். அன்றையதினம் புதிய ஆடை, காதணி, குழந்தைக்கு அணிவிப்பர். பொற்கொல்லர்க்கும் 1 படி அரிசி, தேங்காய் 1, வெற்றிலைப்பாக்கு, பழம் 2, பணம் கொடுத்தனுப்புவர். அனைவருக்கும் உணவளித்து மகிழ்வர் (Venkataraman, 2009).

## குழந்தையின் இதர வைபவங்கள்

குழந்தைக்குத் திடஉணவு வழங்கும் போதும், கல்விக்கற்க தொடங்கும் போதும் மங்கலப் பொருட்கள் கொண்டும், அரிசி முதலானத் தளிகைகள் கொடுத்தும் குலதெய்வக் கோவில்களிலோ அல்லது விருப்பமானக் கோவில்களிலோ வைத்து இந்தச் சடங்கு முறைகளை மேற்கொள்கிறார்கள். இந்தச் சடங்குமுறை குழந்தையின் ஆரோக்கியத்திற்கும், எதிர்கால வாழ்க்கைக்கான வாழ்த்துகளாகவும் அமைகின்றன. முதன் முதலில் ஆரம்பிக்கப்படும்போது மங்களகரமாக எல்லோரும் வாழ்த்துக்கூறித் தொடங்கினால், வளமாக இருக்குமென நம்பப்படுகிறது. அந்தச் சடங்குமுறையைத் தொடர்ந்து, ஆண், பெண் பிள்ளைகளுக்குத் தகுந்தாற்போல் சடங்குமுறைகள் உண்டு.

## தாவணி அணிவிக்கும் சடங்கு (ரவிகதொடிகே)

பெண் குழந்தைக்கு ஒரு நல்லநாள் பார்த்துத் தாவணி அணிவிப்பது வழக்கம். பெண் குழந்தையின் 7 அல்லது 9 அல்லது 11 ம் வயதில் இந்நிகழ்ச்சி நடைபெறும். இந்தவிழா குடும்பத்திலும், சுற்றத்திலும் இருக்கும் சுமங்கலிப் பெண்களால், கடவுளுக்குஜை செய்து கடவுளின் அருள் வேண்டிய

பின்னர் புதுபுடவையும், புது தாவணியும், பெண் குழந்தையை கிழக்கு அல்லது வடக்கு நோக்கி நிற்க வைத்து அணிவிப்பர். பின்னர் அக்குழந்தைக்கு அனைவரும் குங்குமம் சந்தனம் இடுவர். தாய், தந்தை வீட்டார் இருவரும் பட்டுச் சேலை, ரவிக்கை, நகை, பூஜைசாமான்கள் வாழைப்பழம், சந்தனம், குங்குமம், அழகுப்பொருட்கள், அட்சதை, பால், பழவகைகள், பூமாலை, என மங்கலப் பொருட்கள் இடம்பெற்றிருக்கும். குழந்தையின் கையில் வெற்றிலைபாக்கும், வாழைப்பழமும் வைத்துக்கொண்டு பெரியவர்களின் காலில் விழுந்து வாழ்த்துவேண்டுவார்கள். வாழ்த்து வேண்டும் முறையானது ஒவ்வொரு சுபநிகழ்ச்சியிலும் நடைபெறும். பெண்களின் சடங்குமுறையில்; முக்கியபங்கு வகிப்பது தாய்மாமன் 'சீர்' கொடுக்கும் முறை. .இராஜுக்கள் சமூகத்திலும் அதேமுறையையே கடைப்பிடிக்கிறார்கள். மங்கலப் பொருட்கள் தாய்வீட்டில் இருந்து தாம்பாளத்தில் வைத்துக் குழந்தையின் தந்தைவீட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். குழந்தையின் தந்தைவீட்டில் அனைவருக்கும் விருந்து ஏற்பாடு செய்வார்கள்.

## பெண் பூப்பெய்தியவுடன் நடைபெறும் சடங்கு முறைகள். (ஸோத்தா)

பெண் குழந்தைப் பூப்பெய்தியவுடன் தேதி, நேரம், நட்சத்திரம், குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பெண்குழந்தையை ஒருஅறையின் வடக்கு மூலையில் ஐந்து படி நெல்லைக் குவித்து, அதன்மேல் வெற்றிலைப்பாக்கு, வேப்பம் கொத்து, மஞ்சள், வாழைப்பழம் வைத்து, ஐந்து பெண்கள் சேர்ந்து அரைத்த மஞ்சளைப் பருவமடைந்தப் பெண்ணிற்குக் கொடுத்துக் குளிப்பாட்டி, சந்தன, குங்குமம் மாலை அணிவித்து குவித்தநெல்லின் மீது, கிழக்கு முகமாக பார்த்து உட்காரவைப்பார்கள். தூய்மை கருதிப் பெண்ணைத் தனியிடத்தில் வைக்கின்றனர்., பூப்பெய்திய. பெண்ணின் உடல் அதிக வெப்பநிலையைக் கொண்டிருக்கும். அதனால் மஞ்சள் குளிர்ச்சியைத் தரும் மஞ்சளை அரைத்து, தேய்ப்பதன் மூலம் அந்தவெப்பமோ கிருமியோ அண்மையில் பரவாமல் பாதுகாக்கும். பின்னர் அரைத்த மஞ்சள் உருண்டையை அண்டை வீடுகளின் நிலைபடியில் வைப்பர். வீட்டில் சர்க்கரைப் பொங்கல், உளுத்தம்பருப்பு சமைத்து, காப்பரிசி (பச்சரிசி, தேங்காய், வெல்லம் கலந்தது) அக்குழந்தைக்கு உண்ணத் தருவார்கள். பின்னர் அனைவருக்கும் பரிமாறுவர். வீட்டிற்கு வந்த பெண்களுக்கு வாழைப்பழம், வெற்றிலைப்பாக்கு, மஞ்சள், காப்பரிசி கொடுத்து அனுப்புவர்.

## பெண் பூப்பெய்தியவுடன் நடைபெறும் ஏழாம் நாள் சடங்கு முறைகள்

அதிகாலை நான்கு மணியளவில் 7 பெண்கள் அதிகாலையில் வந்து ஒவ்வொருவராகக் குழந்தைக்குத் தென்னைப்பாளைக்குச்சியைக் கொடுத்து, பல்துலக்கக் கூறுவார்கள். மஞ்சளைப்பூசக் கொடுத்து, தலைக்குத் தண்ணீர் ஊற்றி, குளிப்பாட்டிப் புதுப்புடவை உடுத்திக் குங்குமமிட்டு, பஞ்சகாவியம் பாலில் கலந்து அருந்த வைத்து வீட்டினுள் அழைத்துவருவர். இதற்கு முன் அமர்ந்த இடத்தில் உள்ள நெல், பூப்பெய்திய உடை, பழம் ஆகியவற்றை வண்ணாத்திகளுக்குக் கொடுத்துவிடுவர் (Manjula, N., 2021 Informer, Rajapalayam, Virudhunagar, India).

## புப்புனித நீராட்டுவிழா. (பையிண்ட)

இந்தச் சடங்குமுறை பெண் பூப்பெய்திய அதேமாதம் அல்லது 3ம் மாதமோ நடைபெறும். தாய்மாமன் வீட்டில் மங்கலப்பொருட்கள், பட்டுப்புடவை வாங்குவார்கள். பெண்ணின் தாய்மாமன் வீட்டிலிருந்து பட்டுச்சேலை, சட்டை, பழம், குங்குமம், வெற்றிலைபபாக்கு, பால், பூமாலை,அரிசி எள் கலந்து, எள் உருண்டை, வசதிக்கேற்ப நகை, வெள்ளிச்சாமான்கள் இவையனைத்தும் நாதஸ்வரம், மேளம் வாத்தியங்களோடுக் கொண்டு வருவார்கள். முக்கியமாக இச்சடங்குமுறை காலையில் நல்லநேரத்தில் நிகழும். தாய்மாமன் செய்யும் சீர் முறைகள் பிறசமூகத்திலும் காணப்படுகிறது. தாய்மாமன் சீதனம் பற்றிநாட்டுப்புறப் பாடல்களில் காணலாம்.

"மேற்கத்திமாமனும் மேளமும் வந்திறங்க
தெற்கத்திமாமனம் தென்னையும் வந்திறங்க

"தாய்மாமனது சீர்களைப் பகிர்ந்து எடுத்துக் கொண்டுவருவார்" (Jyotirani, 2004). பின்னர் பெண்ணை நன்குஅலங்காரம் செய்து 2 பூமாலைப் போட்டுமனைப் பலகையில் புடவை விரித்து அப்புடவையின் நான்கு மூலையிலும் பழம்,வெற்றிலைப் பாக்கு, காப்பரிசி, எள்ளுருண்டை வைத்துத் துணிமேடை வைத்துப் பெண்ணை உட்காரவைப்பர். பின் ஒவ்வொரு சுமங்கலிப் பெண்ணும், சிறிய உரலில் எள்ளையிட்டு உலக்கையால் குத்தி உருண்டை செய்து பின் உலக்கையால் பெண் குழந்தையின் உடலைத் தொட்டு, குங்குமம் இட்டு,பால் பழம் தந்து, பின் பெண் குழந்தையின் புடவைத் தலைப்பில் வெற்றிலைப்பாக்கு, பழம் கட்டி அனைவரிடமும் வாழ்த்து வாங்கக் கூறுவார்கள். வருகைதந்திருக்கும் அனைவருக்கும் எள்ளுருண்டை, வெற்றிலைப்பாக்கு, பழம் தந்து, விருந்து உபசரித்து அனுப்புவார்கள்.

## சடங்கின் பொருண்மை

மங்களமான பெண்களின் வாழ்த்துக்களைப் பெறுவதன் மூலம், உடல் மனம் ஆரோக்கியம் அடைவது மட்டுமல்லாரல், தன் குடும்ப வாரிசுகள் வாழையடிவாழையாய் பெருகும் என்றே இந்தசடங்குமுறைகள் செய்யப்படுகின்றது. அதில் உபயோகிக்கும் பொருள் குறியீட்டுபொருள் என்று கூறலாம். மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் இதே புத்துணர்ச்சியுடனும், பூரிப்புடனும் வாழவேண்டும் என்பதற்காக எள் ஒரு குறியீடாக பயன்படுத்தப்படுகிறது. எள் இருவித்திலைத் தாவரவிதையாகும். இது நீண்டநாள் கெடாது, மேலும் அதிக அளவிலான எதிர்ப்புசக்திகள் வாய்ந்ததும், நேர்மறை அதிர்வலைகள் உருவாக்கக்கூடியது. எள்ளுருண்டை மற்றவர்களுக்கு கைகளால் கொடுக்கப்படும் போது இதே இன்பம் தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற குறியீட்டின் அடிப்படையில் எள் சடங்கில் பயன்படுத்துகிறார்கள். அரிசியும், மஞ்சளும் கலந்த அட்சதையை. மணப்பெண்ணை வாழ்த்த பயன்படுத்துவார்கள். மஞ்சள் சேர்த்த அரிசியில் எதிர்மறையான அதிர்வலைகளை எதிர்க்கும் சக்தி அதிகம் உள்ளது. "நெல் குவித்தல் சடங்கு முறைமையில் நெல்லானது உமிக்குள் அரிசி இருப்பதுபோல் இந்தப்பெண்ணும் தாய்மை அடையக்கூடியப் பருவத்தை அடைந்துவிட்டாள் என்ற குறியீடாக நிகழ்த்தப்படுகிறது" (Pavithra, N., 2021, Informer, Rajapalayam, Virudhunagar, India). "சடங்குகளில் இடம்பெறும் குறியீடுகள் மிகவும் முனைப்பானதிட்பம் வாய்ந்தவை. சமூகவாழ்வில் வீரியமிக்கவை. சமூகபண்பாட்டு பொருண்மைகளை உயிர்ப்புடன் வலியுறுத்துபவை. வாழ்க்கை வட்டச் சடங்குகளுக்கு உட்படுவோர்க்கு அனுபவவாயிலாகப் புதிய நிலைமாற்றங்களை உணர்த்துகின்றன" (Bhakthavatsala Bharathi, 2002).

## திருமணச் சடங்கு (பெல்லி)

இராஜுக்கள் சமூகத்தில் திருமணச் சடங்கானது நிச்சயதார்த்தம், மாலைமாற்று, திருமணமுகூர்த்தம் என மூன்றுநிலைகளாக நடக்கின்றது. முதல் நிலையாக தனது கோத்திரத்திற்கு அப்பாற்பட்டுள்ள நல்லகுடும்பத்தில் பொருத்தமான வரனை மகன்&மகளுக்கு குடும்பப் பெரியவர்கள் ஆலோசனை செய்துத் தேர்ந்தெடுத்தவுடன் அதை சமூகச் சாவடிகளில் உறுதிசெய்து கொள்வதற்காக (ஒக்காகு) நிச்சயதார்த்தம் வைபவம் செய்யப்படும். மங்கலப் பொருட்களுடன் அரைத்தமஞ்சள், மஞ்சள் தடவியத் தேங்காய் மற்றும் அரிக்கன் விளக்கு அனைத்தும் கொண்டு செல்வது வழக்கமாகும். இரண்டு வீட்டாரும் வீட்டு நிச்சயதார்த்தம் செய்து கொள்வார்கள். பெண் வீட்டிலிருந்து இனிப்பு வகைகளுடன் தேங்காய் (மஞ்சள் தடவியது) அரைத்தமஞ்சள், சந்தனம், குங்குமம், வாழைப்பழம், மஞ்சள் பொடி 12 படி, விரலிமஞ்சள் 3 படி, பணம் என (புட்டா) சீர் செய்வார்கள் (Venkataraman 2009).

## பந்தக்கால் முகூர்த்தம்

திருமண நிகழ்ச்சிக்கு பந்தல்போட ஆரம்பிக்கும் முன் ஒரு முகூர்த்தநாள் பார்த்து, வீட்டில் வடகிழக்கு மூலையில் நல்லநேரத்தில் பெரியவர்கள் முன்னிலையில் தேக்கு மரக்கம்பு நடுவர். 8 அடிக்கு குறையாத மஞ்சள் தடவிய கம்பு, மாவிலை, வெற்றிலைப்பாக்கு, பழம், சந்தனம், தேங்காய், பால், நவதானியம் ஆகிய மங்கலப் பொருட்களுடன் இந்நிகழ்வு நடைபெறும். அதைத் தொடர்ந்து நெல்அவித்தல், உளுந்துதிரித்தல், மாங்கல்யம் செய்யத் தங்கமும் மற்ற இதரசாமான்களும்,

பொற்கொல்லனுக்குக் கொடுத்தல், குயவனிடம் பானை வேண்டுதல், சாய வேஷ்டி தயார் செய்யக் கொடுத்தல் என திருமணத்திற்கு உண்டானச் செயல்களை அந்த நல்லநாளிலே செய்வார்கள்.

## வீட்டு இலைப் பாக்கு(மாலைமார்சேதி)

திருக்கல்யாணவைபவம் நன்கு நடைபெற இரு வீட்டாரும் தங்கள் குலதெய்வத்தை வேண்டி பிராத்தனை செய்து கோயில் பிரசாதங்களை அன்று மாலை மணமக்களுக்கு கொடுத்து குலதெய்வ மாலையும் அணிவித்து வீட்டுப்பெரியவர்கள் வாழ்த்தும் சுபநிகழ்ச்சியாகும். இந்நிகழ்வுக்கு மங்கலப்பொருட்கள் கொண்டுசெல்வார்கள்.

## திருமணம்

திருமணநாளில் மணமகன் ரோஜா நிறப் புத்தாடை கட்டி கிரீடம் போல் தலைப்பாகை சூடி கம்பீரமாக இருப்பர். நெருங்கிய உறவினர்களும் ரோஜா நிறப் புத்தாடை அணிவர். திருமணநாளில் மங்களநாண் அணிவித்தப்பின் புரோகிதர் "உப்பேணுகுபப்பேணுகு" எனும் உப்பிலும் பருப்பிலும் கற்பனையாக யானைஉருவம் வரைந்து மணமகள் பெருமைகளையும், மணமகனின் பெருமைகளையும் கூறுவதாகப் போட்டிப் போட்டுக் கொண்டு, பின் உப்பும் பப்பும் சமம் என்று கூறி சமரசத்துடன் திருமணத்தை நிறைவு செய்வர். பின்னர் மேளதாளத்துடன் நாகவல்லி முகூர்த்தம் செய்து நாகதோஷமின்றி வாழ கருமணித் (பாசி) தாலிக் கட்டுவர். இச்சடங்குகள் முன்போலவே இன்றும் பிராமணர் மூலம் நடத்தப்படுகிறது. முந்தையக் காலத்தில் திருமணம் மூன்றுநாட்கள் நடைபெறும். பொழுது விடிவதற்குமுன் முகூர்த்தம் முடிந்துப்போகும். இதில் தற்காலத்தில் சிறிதுமாற்றங்கள் நிகழ்ந்துள்ளது. திருமணநிகழ்வின்போது மணமகளின் தாய்மாமன் மணமகனுக்கு வெள்ளி,தங்கத்தினாலானப் பூணுல் அணிவிப்பர். பெண் வீட்டார் மணமகனுக்குக் கைக்கடிகாரம், தங்கச்சங்கிலி, மோதிரம் என சீர் செய்வார்கள். திருமணம் முடிந்தபின் பிட்டபொத்தரம் என்று அழைக்கப்படக்கூடிய சிறிய அம்மிக்கல்லை அலங்காரம் செய்துக் குழந்தையாகப் பாவனைசெய்து மணமக்கள் முன் தொட்டிலில் கிடத்தி ஆட்டிப் பாட்டுப்பாடுவார்கள். குலம் தழைக்க பெரியோர்கள் வாழ்த்துவார்கள். இந்தச் சடங்குமுறை இராஜுக்கள் சமூகத்தில் இன்றளவும் கடைப்பிடிக்கப்படுகிறது (Jagannatha Raja, 2002, Informer, Rajapalayam, Virudhunagar, India).

இத்திருமணச்சடங்கினை,

"பொய்யும் வழுவும் தோன்றிய

ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (Jagannatha Raja, 2002, Informer, Rajapalayam, Virudhunagar, India)

தொல்காப்பியர் காலத்திற்குமுன்னர் தமிழர் கரணம் என்ற ஒன்று இன்றியேவாழ்ந்தனர். அவர்காலத்தில் தான் கரணம் என்ற ஒன்றுடன் இல்வாழ்க்கையைத் தொடங்கியுள்ளார்கள் என்று உணரலாம். அன்று மாலை மணமகனை ஏர்தாண்டல் என்ற சடங்கு முறைக்கு அழைத்துச்செல்வார்கள்.

## சடங்கின் பொருண்மை

சுபநிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுது மங்களப்பொருட்களும், மணம் மிகுந்த மலர்களும் அங்கே கூடியுள்ளவர்களிடையே ஒருவித சுகத்ததைப் பரப்புகிறது. மனம் மாறுபட்டு இருக்கக் கூடிய உறவினர்களோ, நண்பர்களோ அந்தச் சுபநிகழ்வின் போது மங்களமான இசை மற்றும் ஈர்க்கும் வாசனை அவர்களின் விரோத எண்ணத்தை மாற்றிவிடும். மணமக்களின் திருமணத்தில் எந்த ஒரு தீங்கான எண்ண அலைகளும் பரவக்கூடாது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே இவ்வகைச் சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இச்சமூகமக்கள் பயன்படுத்தும் ரோஜா நிற மற்றும் வெள்ளைநிறம் கலந்த ஆடையும் தலைப்பாகையும் அவர்களின் பூர்வக்குடியான ஆந்திரமாநிலத்தின் வழக்கமாகும் இந்தவண்ணமயமானச் சடங்குமுறையைக் கடைப்பிடிக்கும் வழக்கமானது, சிவப்புநிறம் சூட்டிற்க்கும்,

வெள்ளைநிறம் குளிருக்கும் அடையாளமாகக் கொள்ளப்படுகிறது. இதனால் சூடும் குளிரும் இணைந்து சமநிலை கொண்டதுதான் வாழ்க்கை என்ற அர்த்தத்தில் தென்னிந்தியத் திருவிழாக்களில்; வெள்ளை, சிவப்பு நிறங்கள் முக்கிய வண்ணங்களாக இருக்கின்றன. இந்த வண்ணமயமான ஆடையின் குறியீட்டினை நாம் உணர்ந்துக் கொள்ள முடியும். மணமகனை ஏர்தாண்ட அழைத்துச் செல்வது பசுமைத் தாவரங்களைப் பார்க்க செய்வதற்காகும். இதன் நோக்கம் பசுமையானத் தாவரங்களைப் பார்க்கச் செய்வது மணமகன் மனதில் பசுமையான நல்ல எண்ணங்கள் மேலெழ வேண்டும் என்பதற்காகவும், வாழ்க்கை முழுவதும் எண்ண அலைகளால் பின்னப்பட்டது. முதன் முதலில் தன் இல்லற வாழ்க்கையை ஆரம்பிக்கும் போது நல்ல எண்ணங்கள் நிரம்பியிருக்கச் செய்யும் சடங்குமுறையாகவும் அமைகின்றது (Ramachandran Raja, T.S., 2021 Informer, Janaki ammal college, Virudhunagar, India).

## இறப்புசடங்கு

இறந்த தாய், தந்தையர்க்கு இறுதிக் கடன் செய்யும் உரிமை குடும்பத்தின் மூத்த ஆண் மகனுக்கு மட்டுமே உரியது. மறைந்தவரை வடக்குப் பார்த்துப் படுக்க வைத்து தலைக்குப் பின்னால் பச்சரிசி வைத்து அதன்மேல் வெண்கலக் கிண்ணத்தில் நல்லெண்;ணெய் ஊற்றித் திரி வைத்து விளக்கு ஏற்றி வைப்பார்கள். இறப்புச் சடங்குகளுக்கு அடிப்படை கருட புராணமே ஆகும். இறந்தவரைக் குளிப்பாட்டி, ஏணி வடிவப் பாடையில் வைத்து பலவிதமான சடங்குகள் செய்து, இடுகாட்டுக்குத் தூக்கிச் செல்வார்கள். தூக்கிச் சென்ற பிறகு, அங்கு இருப்பவர்களுக்கு தென்னம்பாளைக் குச்சியும், மஞ்சளும் கொடுப்பார்கள். இடுகாட்டிற்கு சென்றவர்கள் வருவதற்கு முன்னால் அங்குள்ள அனைவரும் குளித்து விட்டை சுத்தம் செய்வர். இடுகாட்டிற்கு சென்ற அனைவரும் குளித்துவிட்டு வருவார்கள். அவர்கள் வீட்டிற்குள் நுழையும் முன் கண்டிப்பாக கால்களை அலம்பிவிட்டு வர வேண்டும் என்பது சம்பிரதாயமாகும். இறந்தவர்கள் வீட்டின் அறையில் ஒரு மூலையில் கிழக்குப் பார்த்து குத்து விளக்கை ஏற்றி வைத்து அது 11ம் நாள் வரை அணையாமல் பார்த்துக் கொள்வார்கள் இரண்டாம் நாள் நவதானியம் செம்மண்ணில் முளைக்க வைப்பார்கள். அதைச் சுற்றிலும் கிடுகு மூடி, நாளுக்கு இரண்டு தடைவை அதில் தண்ணீர் தெளிப்பார்கள். நன்றாக வளர்ந்து வரும் அதை 11ம் நாள் எடுத்துவந்து நடுகல் நட்டு புரோகிதர் வேதமந்திரச் சடங்கு நடத்தி பிண்டம் தந்து, அதைச் சேர்த்து ஆற்றில் கரைத்துவிடுவார்கள். 12 வது நாள் புரோகிதர்க்குத் தானம் தருதல் சடங்கு, அப்போது புரோகிதர் முன்னோர்களுக்கு பிண்டம் வைத்து வேதமந்திரம் ஓததுவார், இலைகளில் அரிசி, காய்கறி வைத்தும், விளக்கு, குடை, செம்பூ, விசிறி, முதலியப் பொருட்களையும் வைத்து பிராமணர்களுக்குத் தானம் செய்வார்கள். இதையடுத்து பல பிராமணர்களும் வாழை இலையில் அரிசி, காய்கறி, தட்சணை போன்றவற்றை வைத்துக் கொடுப்பார்கள். 12 ம் நாள் மாலை ஈமக்கடன் செய்தவற்கு வேஷ்டிகட்டும் சடங்கு நடைபெறும். சம்பந்த வழி உறவினர்கள் மற்றும் தாய்மாமன் வீட்டிலிருந்தும் வேஷ்டி, சட்டை, துண்டு, வெற்றிலைபாக்கு முதலியவற்றுடன் வந்திருந்து, கொள்ளி வைத்தவருக்கு வேஷ்டி, துண்டு வைத்துக் கட்டுவார்கள். வந்தவர்களுக்கு குங்குமம், சந்தனம், வெற்றிலைபாக்கும் கொடுத்துப் பெரியவர்களைத் தொழுது வாழ்த்துப் பெற்றவுடன், வந்திருக்கும் அனைவரும் சென்ற பின்னர், வீட்டு உறவினர்களுடன் ஆலயத்திற்குச் சென்று பூசை மற்றும் அர்ச்சனை செய்து வழிப்பட்டு வருவார்கள். 13 ஆம் நாள் தமது வீட்டிலுள்ளவர்கள், கொள்ளிவைத்தவர் மற்றும் உறவினர்கள் சிலர் எண்ணைய் தேய்த்துக் குளித்துவிட்டு, உணவை உண்பார்கள். இத்துடன் இறப்புச் சடங்குகள் நிறைவுபெறும் (Jagannatha Raja, 2002, Informer, Rajapalayam, Virudhunagar, India). ஆயினும் தற்போது இவ்வைபவங்களில் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. 5ம் நாள், 7ம் நாள் இம்மரணச் சடங்கை முடித்துவிடுகிறார்கள். வெளியூர் பணியிட விடுமுறை, திருமணத்தடைகள் போன்றவற்றின் காரணமாக இம்மாற்றம் தவிர்க்க முடியாததாகிறது (Jagannatha Raja, 2002, Informer, Rajapalayam, Virudhunagar, India). மருதநில மக்களின் இயல்பினை விவரிக்கும் பொருநராற்றுப்படை நூலில் பலி சோறிடும் சடங்கு இடம் பெற்றுள்ளது.

“கூடு கெழீஇயகுடிவயினான்

செஞ்சோற்ற பலி மாந்திய

கருங்காக்கை கவவு முனையின்
மனைநொச்சிநிழல் ஆங்கண்
ஈற்றுய்மைதன் பார்ப்பு ஓம்பும்" (Jagannatha Raja, 2002, Informer, Rajapalayam, Virudhunagar, India)

## சடங்கின் பொருண்மை

தூய்மையின் பொருட்டு வீட்டை சுத்தம் செய்தல், மஞ்சள், தென்னம்பாளைக் கொடுக்கக் கூடிய சடங்குமுறை பின்பற்றப்படுகிறது. (சிலமொக்கலு) நவதானியம் வளர்த்தல் சடங்குமுறையானது தானியங்கள் இருட்டில் அமைதி சூழலில் தான் வளரும் அதுபோல் நன்மை பொருந்திய உயர்வான இடத்தில், இறந்த ஆன்மாவின் பிறப்பு சுகமாகவும், ஆத்மசக்தியுடனும் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற குறியீட்டின் அடிப்படையில் கடைப்பிடிக்கப்படுகிறது. எள்ளை உபயோகிப்பது மிக முக்கியமாக இருக்கின்றது. பூப்பெய்தியச் சடங்கு, இறப்புச்சடங்கு என இரண்டிலும்; எள்ளினை வைத்துக் கொண்டுச் சடங்கு செய்கின்றனர். எள்ளை வைத்துக் கொண்டு கடவுளிடம் வேண்டுதல் செய்யும் பொழுது நிச்சயமாக நிறைவேறும் என்பது அறிவியல் சார்ந்த உண்மை. எள் இருவித்திலைதாவரம் நீண்டநாள் கெடாத எதிர்ப்புசக்தி மிகுந்த தானியம் "கடுகுசிறுத்தாலும் காரம் குறையாது" என்று கூறுவதுபோல, எள் சிறியதாக இருந்தாலும் அதன் சக்தி அதிகம் (Ramachandran Raja, T.S., 2021, Informer, Janaki ammal college, Virudhunagar, India). "சடங்குகள் அடிப்படையிலான சமுகவாழ்வின் மூலம் இப்பிரபஞ்ச ஒழுங்கு காக்கப்பட்டு இருக்கின்ற ஒழுங்கமைவானது அக, புறச் சூழல்களால் அச்சுறுத்தப்படும் போது மீள்சமன் செய்யப்பட்டு / மறு ஒழுங்கு செய்யப்பட்டு மீண்டும் மீண்டும் ஒழுங்கு நிலைநிறுத்தப்படுகிறது. இந்நிகழ்வில் இருவகைச் சடங்குகளுக்குள் (ஆக்கநிலை,எதிர்நிலை) பரஸ்பர ஊடாட்டம் ஒரு பரிவர்த்தனை நிகழ்வாக அமைந்து பண்பாட்டின் பௌதிக இயக்கத்தினை நிலைப்பெறச் செய்யும்" (Bhakthavatsala Bharathi, 2002).

## இதரசடங்கு வகைகள்

மேற்கூறியவற்றைத் தவிர விழாச் சடங்குமுறைகள் மற்ற சமுகமக்களை போன்றே கடைப்பிடிக்கின்றனர். தனித்துவம் என்ற அடிப்படையில் அடங்கும் சடங்குமுறைகளை மட்டும் கொண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

## சடங்குமுறையில் நலிவு

சடங்குகளின் பொருண்மையானது சமுதாயத்ததிற்குச் சமுதாயம் காலத்திற்கு காலம் மாறும் தன்மையது. வழிவழியாக பின்பற்றிக் கொண்டு வரும் மூடநம்பிக்கை எனக் கருதி விட்டுவிடக் கூடிய அவலம் ஒரு பக்கம், தேவையானப் பொருட்கள் கிடைக்கப் பெறாத ஒருகாரணம் மற்றும் அதைப் பற்றிய முழுவிவரங்கள் தெரியாதக் காரணங்களாலும் நலிவடைகின்றன. எடுத்துக்காட்டாக மாவிலை கிடைக்காததனால் நெகிழியில் மாவிலைதோற்றத்தில் தோரணம் கட்டுதல், நெகிழிப்பூக்கள், வண்ணக்கோலக் காகிதம் ஒட்டுதல் இவைப் போன்று பல அறியலாம். அறியாமைக்கு எடுத்துக்காட்டாக பசுவின் பஞ்சகாவ்யம் எடுத்து மூன்று மணிநேரத்தில் தெளிக்கவேண்டும் ஆனால் முதல் நாள் வாங்கி வந்து மறுநாள் சுபநிகழ்ச்சிக்கு தெளித்தல் புண்ணியம் அல்ல, முறையான பலனும் முறையும் தெரிந்து, சடங்கு முறைமைகளைக் கடைப்பிடித்தால் சடங்குமுறையும் நலிவு அடையாது முழுபலன் கிடைக்கும். இன்றையபேரிடர் காலத்தில் நாம் பாதுகாப்புக்காக பின்பற்றப்படும் வழிமுறைகளை தொன்மை காலமாக சடங்குமுறைகளாக நம் முன்னோர்கள் கடைப்பிடித்தது பெரும் வியப்பாகவும், பெருமிதமாகவும் இருக்கின்றது.

## முடிவுரை

கரிசல் வட்டாரத்தில் வாழ்ந்துவருகின்ற இராஜுக்கள் சமூகத்தின் சடங்குமுறைகளில் காணப்படும் இன்னும் பல சடங்கு முறைகளையும், தொன்மையானப் பழக்கங்களையும் ஆய்வு செய்தால் பல ஆய்வுப் பொருண்மைகள் கிடைக்கலாகும். இந்தச் சமூகம் மட்டுமல்ல அனைத்துச் சமூக சடங்குமுறைகளும் ஆய்வுக்கு உரியதே. சடங்குகளின் செயல்பாடுகளையும், தன்மைகளையும் அறிவியல் சார்ந்த கூர்நோக்குப் பார்வையில் ஆராய்ந்தால் ஒவ்வொரு சடங்குமுறையும் மனிதன் இயற்கையுடன் இணைந்து வாழக்கூடியப் பொருண்மையின் குறியீடாகவும், வாழ்வியல் பண்பாட்டுத் தளங்களில் அறிவியல் சார்ந்த உள்ளீடுகள் அழியப்படாமல் காலம் கடந்தும் தொடர்வதற்காகவும் இத்தகையச் சடங்கு முறைமைகளாகப் பின்பற்றப்படுகின்றன என்ற உண்மையை ஆய்வின் வழி அறிய முடிகின்றது (Vanitha, 2015). "சடங்குகளின் பொருண்மையானது இப்பிரபஞ்சத்தின் அனைத்து இயல் நிகழ்ச்சிகளையும் புரிந்துகொள்ளக்கூடியஉலகப் பார்வையோடு இணைவுப்பெற்றதாகும்" என்பதன் மூலம் உணரலாம் (Bhakthavatsala Bharathi, 2002).

## References

Bhakthavatsala Bharathi, (2002) Tamilar Manidaviyal, Meiyappan manivasagar printers, Chennai, India.

Jagannatha Raja, M, G., (2002) Rajapalayam Saththiriya Rajukal, Kurunchippoo Veeliyedu, Rajapalayam, India.

Jyotirani, K.A., (2004) Thamilar panpattu thalathil sadangukal, Thanaithanea veeliyedu, Chennai, India.

Vanitha, S., (2015) Valviyal panpattu thalikaikal, Kavya Veeliyedu, Chennai, India.

Venkataraman, V., (2009) Rajapalayam Saththiriya Rajukalin kudumpasampirathaiyangal, Umaiyal Press, Rajapalayam, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License